## கம்பம் நகராட்சி

2020–ஆம் ஆண்டு ஜுலை மாதம் (30.07.2020) ஆம் நாள் வியாழன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| 1. | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 07/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம். |
| 2. | நகராட்சி பொறியாளர் அவர்களின் 07/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். டி.என். 60 V 2194 வாகனத்திற்கு காப்பீடு காலம் 15.08.2020–ம் தேதி முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கம்பம் மூலம் வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணம் ஒரு ஆண்டு காலத்திற்கு ரூ.12,529/–ஐ (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து ஐநூற்று இருபத்து ஒன்பது மட்டும் ) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |
| 4. | இந்நகராட்சியில் பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவு நகல் பெறுக்கி (ஜெராக்ஸ்) இயந்திரங்களுக்கு (Versalink Xerox Machine ) பயன்படுத்தப்பட்டு வந்த டோனர்கள் தீர்ந்துவிட்ட படியால் புதிதாக 10 டோனர்கள் வாங்கிக்கொள்ளவும், மேற்படி இயந்திரத்தில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்திடவும் அங்கீகாரம் பெற்ற மதுரை, திருப்பதி ஆபிஸ் புராடக்ட்ஸ் நிறுவனம் மூலம் டோனர்கள் கொள்முதல் செய்திடவும், பழுதுகள் சரிசெய்திடவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,50,000/–க்கும் (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்படி செலவினத்தை 2020–2021ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |
| 5. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21, வேலப்பர்கோவில் தெருவிலிருந்து வரும் மழைநீர் மற்றும் கழிவுநீரை கடத்துவதற்கு, நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலை 220 கம்பம் நகர் பகுதி சாலை (SHU 220) கி.மீ 2/10–ல் சாலையில் வலதுபுறம் கம்பம் நகராட்சி மூலம் கழிவுநீர் வடிகால் அமைக்க உதவிக்கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலை துறை, உத்தமபாளையம் மூலம் அனுமதிக்கப்பட்டதன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடத்தில் வடிகால் அமைக்கப்படுவதை ஆட்சேபித்து திரு. வேல்பாண்டியன், கதவு எண். 30பி/21, குட்டியாபிள்ளை தெரு, கம்பம் என்பவரால் தேனி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண். 105/2020 –ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகியும், தொடர்ந்து வழக்கினை நடத்திடவும் திரு. ஏ. பாலமுருகன், B.Com., L.L.B., அரசு வழக்கறிஞர், தேனி அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ. 10,000/– அய் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம். |

**6.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே வார்டு D, பிளாக்–25, நகரளவை எண். 8/5–இல் கட்டுப்பட்டுள்ள 2.55 ஏக்கர் நிலத்தினை பொது உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக நிலப்பயன்பாடு மாற்றம் செய்து தரக்கோரி திரு. எஸ். உமர்பாரூக் விண்ணப்பம் செய்ததனை ஏற்று இயக்குநர் , நகர் ஊரமைப்புத் துறை, சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு DDP (V) DTCP No. 14/2019 – இன்படி அனுமதி வழங்கப்பட்டதினை, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 33(ii) –இன்படி பொது உபயோக பகுதியிலிருந்து குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து இறுதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 787/2018/எப்1)

**7.** இந்நகராட்சி வார்டு எண் 20 கொண்டிதொழு தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள மேல்நிலை தொட்டியினை அகற்றிட நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் கடித எண் 1778/2020/பி2/நாள் 18.06.2020ன் படி பழுதடைந்த மேல்நிலை தொட்டியினை மேல்மட்டத்தை இடித்து Mini power Pump அமைத்திட அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூபாய் 1,00,000/–க்கும், (ரூபாய் ஒருஇலட்சம் மட்டும்) மேற்படி பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கான செலவினத்தை 2020–2021 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**8.** சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு எண். W.A.(MD)No.826 of 2017 மற்றும் C.M.P.(MD) No. 5690 of 2017 –ன் மீதான 23.06.2017ஆம் தேதிய தீர்ப்பின் மீது, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி விண்ணப்பம் 14.05.2018–ஆம் நாள் அரசு வழக்கறிஞர் மூலம் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி தீர்ப்பாணைக்கு தடையுத்தரவு பெறப்பட்டுள்ளது (Diary No. 4797/2018) . தற்போது 15.06.2020 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகியமைக்கு வழக்கறிஞர் கட்டணம் மற்றும் இதர செலவினத் தொகை ரூ. 20,000/– ஐ வழங்க வழக்கறிஞர் திரு. ஐ. கணேசன் 08.07.2020–ஆம் தேதி கடிதம் மூலம் கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மேற்படி வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ. 20,000/–ம் வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1111/2013/எச்1)

**9.** தனி அலுவலரின் முன்அனுமதியின்படி, இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN. 60 T 4524 டம்பர் பிளேசர் லாரிக்கு 18.07.2020–உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், 17.07.2020–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. பி. முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 1,59,950/– |
| 2. | திரு. S. முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், கம்பம். | 1,60,950/– |

**அலுவலகக்குறிப்பு:–**வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 1408/2020/எச்1)

| | |
|---|---|
| 10. | கம்பம் நகராட்சியில் பொசு சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN. 60 T 4507 டிப்பர் லாரிக்கு 10.08.2020 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிததாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ. 1,60,000/—ஐ (ருபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1408/2020/எச்1)** |
| 11. | இந்நகராட்சிக்கு சொந்தமான மினிலாரி எண். TN. 60 Y 1959 – இல் பேட்டரி பழுதடைந்துவிட்டது. எனவே, மேற்படி வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ. 25,000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு** : – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 1774/2020/எச்1)** |

**ஒப்பம்/— திருமதி. ரா. கமலா**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 30.07. 2020**
**இடம். கம்பம்**